### அகவற்பா

0293. கயங்கெழு கருங்கடல் முதுகுதெரு மரலுற
இயங்குதிமில் கடவி எறிஇளி நுளையர்
நெய்ம்மீன் கவரல் வேண்டிக் கைம்மிகுத்
தால வட்டம் ஏய்ப்ப மீமிசை
முடிகெழு தருவலை வீசி முந்நீர்க்

குடரென வாங்கிக் கொள்ளை கொண்ட
சுரிமுகச் சங்கும் சுடர்விடு பவளமும்
எரிகதிர் நித்திலத் தொகுதியுங் கூடி
விரிகதிர் நிலவுஞ் செக்கருந் தாரகை
உருவது காட்டும் உலவாக் காட்சித்

தண்ணந் துறைவன் தடவரை அகலம்
கண்ணுறக் கண்டது முதலா ஒண்ணிறக்
காள மாசுணங் கதிர்மதிக் குழவியைக்
கோளிழைத் திருக்குங் கொள்கை போல
மணிதிகழ் மிடற்று வானவன் மருவும்

அணிதிகழ் அகலத்(து) அண்ணல் ஆரூர்
ஆர்கலி விழவின் அன்னதோர்
பேர்செலச் சிறந்தது சிறுநல் லூரே.

### வெண்பா

0294 ஊரெலாந் துஞ்சி உலகெலாம் நள்ளென்று
பாரெலாம் பாடவிந்த பாயிருட்கண் - சீருலாம்
மாந்துறைவாய் ஈசன் மணிநீர் மறைக்காட்டுப்
பூந்துறைவாய் மேய்ந்துறங்கா புள்.

### கட்டளைக் கலித்துறை

0295 புள்ளுந் துயின்று பொழுதிறு மாந்து கழுதுறங்கி
நள்ளென்ற கங்குல் இருள்வாய்ப் பெருகிய
வார்பனிநாள்
துள்ளுங் கலைக்கைச் சுடர்வண் ணனைத்தொழு
வார்மனம்போன்(று)
உள்ளும் உருக ஒருவர்திண் தேர்வந் துலாத்தருமே.

### அகவற்பா

0296 உலாநீர்க் கங்கை ஒருசடைக் கரந்து
புலால்நீர் ஒழுகப் பொருகளி றுரித்த
பூத நாதன், ஆதி மூர்த்தி,
திருமட மலைமகட்(கு) ஒருகூறு கொடுத்துத்தன்
அன்பின் அமைத்தவன் ஆரூர் நன்பகல்
வலம்புரி அடுப்பா மாமுத் தரிசி
சலஞ்சலம் நிறைய ஏற்றி நலந்திகழ்
பவளச் செந்தீ மூட்டிப் பொலம்பட
இப்பியந் துடுப்பால் ஒப்பத் துழாவி
அடாஅ(து) அட்ட அமுதம் வாய்மடுத்

திடாஅ ஆயமோடு உண்ணும் பொழுதில்
திருந்திழைப் பணைத்தோள் தேமொழி மாதே,
விருந்தின் அடியேற்(கு) ருளுதி யோஎன
முலைமுகம் நோக்கி முறுவலித் திறைஞ்சலின்
நறைகமழ் வெண்ணெய்ச் சிறுநுண் துள்ளி

பொங்குபுனல் உற்றது போலஎன்
அங்க மெல்லாந் தானா யினனே.

### வெண்பா

0297 ஆயினஅன்(பு) ஆரே அழிப்பர்? அனலாடி
பேயினவன் பார்ஓம்பும் பேரருளான் - தீயினவன்
கண்ணாளன் ஆரூர்க், கடலார் மடப்பாவை
தண்ணாருங் கொங்கைக்கே தாழ்ந்து.

### கட்டளை கலித்துறை

0298 தாழ்ந்து கிடந்த சடைமுடிச் சங்கரன்
தாள்பணியா(து)
தாழ்ந்து கிடந்துநை வார்கிளை போல்அய்
வேற்கிரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல் திரையென்னும்
கையெறிந்து
வீழ்ந்து கிடந்தல றித்துயி லாதிவ் விரிகடலே.

### சேரமான் பெருமாள் நாயனார் அருளிய

## 8. திருக்கைலாய ஞானஉலா

### கலிவெண்பா

### தலைவன் புகழ்

0299

திருமாலும் நான்முகனும் தேர்ந்துணரா(து) அங்கண்
அருமால் உற; அழலாய் நின்ற - பெருமான்.

பிறவாதே தோன்றினான்; காணாதே காண்பான்;
துறவாதே யாக்கை துறந்தான் முறைமையால்

ஆழாதே ஆழ்ந்தான்; அகலா(து) தகலியான்;
ஊழால் உயராதே ஓங்கினான்- சூழொளிநூல்

ஓதா துணர்ந்தான்; நுணுகாது நுண்ணியான்
யாதும் அணுகாது அணுகியான்;-ஆதி

k5 அரியாகிக் காப்பான்; அயனாய்ப் படைப்பான்;
அரனாய் அழிப்பவனுந் தானே- பரனாய

k6 தேவர் அறியாத தோற்றத்தான்; தேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான்; -ஓவாதே

k7 எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்; எவ்வுருவும்

k8 தானேயாய் நின்றளிப்பான்; தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்குக் காண்பரிய எம்பெருமான்; - ஆனாத

k9 சீரார் சிவலோகந் தன்னுள் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயி லுள்ளிருப்ப - ஆராய்ந்து

k10 செங்கண் அமரர் புறங்கடைக்கண் சென்றீண்டி
எங்கட்குக் காட்சிஅருள் என்றிரப்ப -அங்கொருநாள்

**இறைவன் கோலம் கொள்ளல்**

k11 பூமங்கை, பொய்தீர் தரணி புகழ்மங்கை,
நாமங்கை என்றிவர்கள் நன்கமைத்த - சேமங்கொள்

k12 ஞானக் கொழுந்து நகராசன் தன்மடந்தை
தேன்மொய்த்த குஞ்சியின்மேல் சித்திரிப்ப- ஊனமில்சீர்

k13 நந்தா வனமலரும் மந்தா கினித்தடஞ்சேர்
செந்தா மரைமலர்நூ றாயிரத்தால் - நொந்தா

k14 வயந்தன் தொடுத்தமைத்த வாசிகை சூட்டி
நயந்திகழும் நல்லுறுப்புக் கூட்டிப் - பயன்கொள்

k15 குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தம் கொண்டு
தலமலிய ஆகந் தழீஇக் - கலைமலிந்த

k16 கற்பகம் ஈன்ற கமழ்பட் டினையுடுத்துப்
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து - விற்பகரும்

k17 சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்துத்- தோளா

k18 மணிமகர குண்டலங்கள் காதுக் கணிந்தாங்(கு)
அணிவயிரக் கண்டிகை பொன்னாண்-
பணிபெரிய

k19 ஆரம் அவைபூண்(டு) அணிதிக ழும்சன்ன
வீரந் திருமார்பில் வில்இலக - ஏருடைய

k20 எண்தோட்கும் கேயூரம் பெய்துஉதர பந்தனமும்
கண்டோர் மனம்மகிழக் கட்டுறீஇக் - கொண்டு

k21 கடிசூத் திரம்புனைந்து, கங்கணம்கைப் பெய்து
வடிவுடைய கோலம் புனைந்தாங்கு -அடிநிலைமேல்

**இறைவன் புறப்பாடு**

k22 நந்திமா காளர் கடைகழிந்த போழ்தத்து
வந்து வசுக்கள் இருக்குரைப்ப -அந்தமில்சீர்

k23 எண்ணங் கீர்த்தி எழுவர் இருடிகளும்
அண்ணல்மேல் ஆசிகள் தாம் உணர்த்த - ஒண்ணிறத்த

k24 பன்னிருவர் ஆதித்தர் பல்லாண் டெடுத்திசைப்ப
மன்னும் மகதியன்யாழ் வாசிப்பப் - பொன்னியலும்

k25 அங்கி கமழ்தூபம் ஏந்த யமன்வந்து
மங்கல வாசகத்தால் வாழ்த்துரைப்பச் - செங்கண்

k26 நிருதி முதலோர் நிழற்கலன்கள் ஏந்த
வருணன் மணிக்கலசந் தாங்கத் - தெருவெலாம்

k27 வாயு நனிவிளக்க மாமழை நீர்தெளிப்பத்
தூயசீர்ச் சோமன் குடையேடுப்ப - மேவியசீர்

k28 ஈசானன் வந்தடைப்பை கைக்கொள்ள அச்சுனிகள்
வாயார்ந்த மந்திரத்தால் வாழ்த்துரைப்பத்- தூய

k29 உருத்திரர்கள் தோத்திரங்கள் சொல்லக் குபேரன்
திருத்தகு மாநிதியஞ் சிந்தக் - கருத்தமைந்த

k30 கங்கா நதியமுனை உள்ளுறுத்த தீர்த்தங்கள்
பொங்கு கவரி புடைஇரட்டத் -தங்கிய

k31 பைந்நாகம் எட்டும் சுடரெடுப்பப் பைந்தறுகண்
கைந்நாகம் எட்டும் கழல்வணங்க - மெய்ந்நாக

k32 மேகம் விதானமாய் மின்னெலாஞ் சூழ்கொடியாய்
மோகத்(து) உருமு முரசறையப்- போகம்சேர்

k33 தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட - எம்பெருமான்

k34 விண்ணார் பணிய உயர்ந்த விளங்கொளிசேர்
வெண்ணார் மழவிடையை மேல்கொண்டாங்கு-
எண்ணார்

k35 கருத்துடைய பாரிடங்கள் காப்பொத்துச் செய்யத்
திருக்கடைகள் ஏழ்கடந்த போதில் - செருக்குடைய

k36 சேனா பதிமயில்மேல் முன்செல்ல யானைமேல்
ஆனாப்போர் இந்திரன் பின்படர - ஆனாத

k37 அன்னத்தே ஏறி அயன்வலப்பால் கைபோதக்
கன்னவிலும் திண்டோள் கருடன்மேல்- மன்னிய

k38 மால்இடப்பாற் செல்ல மலரார் கணைஐந்து
மேல்இடப்பால் மென்கருப்பு வில்இடப்பால் -
ஏல்வுடைய

k39 சங்கணையும் முன்கைத் தடமுலையார்
மேல்எய்வான்
கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த
-ஐங்கணையான்

k40 காமன் கொடிப்படைமுன் போதக் கதக்காரி
வாமன் புரவிமேல் வந்தணைய -நாமஞ்சேர்

k41 வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்துச்
சூழ்வளைக்கைத் தொண்டைவாய்க்
கெண்டையொண்கண் தாழ்கூந்தல்

k42 மங்கை எழுவருஞ் சூழ மடநீலி
சிங்க அடலேற்றின் மேற்செல்லத் - தங்கிய

k43 விச்சா தரர்இயக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணர்அரக்க ரோடுஅசுரர்- எச்சார்வும்

k44 சல்லரி தாளம் தகுணிதம் தத்தளகம்
கல்லலகு கல்ல வடமொந்தை - நல்லியலத்

k45 தட்டழி சங்கம் சலஞ்சலந் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம் - கொட்டும்

k46 குடமுழுவம் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாம் தடாரி படகம் - இடவிய

k47 மத்தளம் துந்துபி வாய்ந்த முரு(டு) இவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப- ஒத்துடனே

k48 மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்
கிங்கரரும் எங்குங் கிலுகிலுப்பத் -தங்கிய

k49 ஆறாம் இருதுவும், யோகும், அருந்தவமும்
மாறாத முத்திரையும், மந்திரமும், - ஈறார்ந்த

k50 காலங்கள் மூன்றும் கணமும் குணங்களும்
வால கிலியரும் வந்தீண்டி- மேலை

k51 இமையோர் பெருமானே போற்றி! எழில்சேர்
உமையாள் மணவாளா போற்றி -எமைஆளும்

k52 தீயாடி போற்றி! சிவனே அடிபோற்றி!
ஈசனே, எந்தாய், இறைபோற்றி! - தூயசீர்ச்

k53 சங்கரனே போற்றி! சடாமகுடத் தாய்போற்றி!
பொங்கரவா பொன்னங் கழல்போற்றி! -
அங்கொருநாள்

k54 ஆய விழுப்போர் அருச்சுனன் ஆற்றற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி! தூய

k55 மலைமேலாய் போற்றி! மயானத்தாய் வானோர்
தலைமேலாய் போற்றிதாள் போற்றி!
-நிலைபோற்றி

k56 போற்றினெனப் பூமாரி பெய்து புலன்கலங்க
நாற்றிசையும் எங்கும் நலம்பெருக, -ஏற்றுக்

k57 கொடியும் பதாகையும் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலுஞ் சூழக் - கடிகமழும்

k58 பூமாண் கருங்குழலார் உள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் வரும்போழ்திற் - சேமேலே

**மகளிர் குழாங்கள்**

k59 வாமான ஈசன் மறுவில்சீர் வானவர்தம்
கோமான் படைமுழக்கம் கேட்டலுமே -தூமாண்பில்

k60 வானநீர் தாங்கி மறைஓம்பி வான்பிறையோ(டு)
ஊனமில் சூலம் உடையவாய்- ஈனமிலா

k61 வெள்ளை யணிதலால் வேழத் துரிபோர்த்த
வள்ளலே போலும் வடிவுடைய -ஒள்ளிய

k62 மாட நடுவில் மலர்ஆர் அமளியே
கூடிய போர்க்கள மாக்குறித்துக் - கேடில்

k63 சிலம்பு பறையாகச் சேயரிக்கண் அம்பா
விலங்கு கொடும்புருவம் வில்லா- நலந்திகழும்

k64 கூழைபின் தாழ வளைஆர்ப்பக், கைபோந்து
கேழ்கிளரும் அல்குலாம் தேர்உந்திச் - சூழொளிய

கொங்கைமாப் பொங்கக் கொழுநர் மனம்கவர
அங்கம் பொருதசைந்த ஆயிழையார் - செங்கேழ்நற்

பொற்கலசத் துள்ளால் மணிநீர் முகம்சேர்த்தி
நற்பெருங் கோலம் மிகப்புனைந்து-பொற்புடைய

பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக
மாதரவர் சொல்லார் மகிழ்ந்தீண்டிச் - சோதிசேர்

சூளிகையும் சூட்டும் சுளிகையும் சுட்டிகையும்
வாளிகையும் பொற்றோடும் மின்விலக- மாளிகையின்

மேல்ஏறி நின்று தொழுவார்; துயர்கொண்டு
மால்ஏறி நின்று மயங்குவார் - நூலேறு

தாமமே தந்து சடாதாரி நல்கானேல்,
யாமமேல் எம்மை அடும்என்பார்- காமவேள்

ஆம்என்பார் அன்றென்பார் ஐயுறுவார்; கையெறிவார்
தாம்முன்னை நாணோடு சங்கிழப்பார்; - பூமன்னும்

பொன்னரி மாலையைப் பூண்பார்அப் பூண்கொண்டு
துன்னரி மாலையாச் சூடுவார்; - முன்னம்

ஒருகண் எழுதிவிட்(டு) டொன்றெழுதா தோடித்
தெருவம் புகுவார்; திகைப்பார்; - அருகிருந்த

கண்ணாடி மேற்பஞ்சு பெய்வார் கிளியென்று
பண்ணாடிச் சொற்பந்துக் குற்றுரைப்பார்;
-அண்ணல்மேற்

கண்ணென்னும் மாசாலங் கோலிக் கருங்குழலார்
திண்ணம் நிறைந்தார் திறந்திட்டார்; -ஒண்ணிறத்த

### 1. பேதை

பேதைப் பருவம் பிழையாதாள் வெண்மணலால்
தூதைச் சிறுசோ றடுதொழிலாள்; -தீதில்

இடையாலும் ஏக்கழுத்தம் மாட்டாள்; நலஞ்சேர்
உடையாலும் உள்உருக்க கில்லாள்; -நடையாலும்

கௌவைநோய் காளையரைச் செய்யாள்; கதிர்முலைகள்
வெவ்வநோய் செய்யுந் தொழில்பூணாள்; - செவ்வன்நேர்

நோக்கிலும் நோய்நோக்கம் நோக்காள்; தன்
செவ்வாயின்
வாக்கிற் பிறர்மனத்தும் வஞ்சியாள்; -பூக்குழலும்

பாடவம் தோன்ற முடியாள் இளவேய்த்தோள்
ஆடவர் தம்மை அயர்வுசெய்யாள்; - நாடோறும்

ஒன்றுரைத் தொன்றுன்னி ஒன்றுசெய்
தொன்றின்கண்
சென்ற மனத்தினளாஞ் சேயிழையாள்- நன்றாகத்

தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி
நீல அறுவை விரித்துடுத்துக் கோலஞ்சேர்

பந்தரில் பாவைகொண்(டு) ஆடுமிப் பாவைக்குத்
தந்தையார் என்றொருத்தி தான்வினவ - அந்தமில்சீர்

ஈசன் எரியாடி என்ன அவனைஓர்
காய்சின மால்விடைமேல் கண்ணுற்றுத் தாய்சொல்

இக்கணக்கு நோக்காள் இவள்போல்வாள் காமநூல்
நற்கணக்கின் மேற்சிறிதே நாட்செய்தாள்-
பொற்புடைய

### 2. பெதும்பை

பேரொளிசேர் காட்சிப் பெதும்பைப் பிராயத்தாள்
காரொளிசேர் மஞ்ஞைக் கவினியலாள்- சீரொளிய

தாமரை ஒன்றின் இரண்டு குழைஇரண்டு
காமருவு கெண்டை,ஓர் செந்தொண்டை, -தூமருவு

முத்தம் முரிவெஞ் சிலை, சுட்டி, செம்பவளம்
வைத்து போலும் மதிமுகத்தாள் - ஒத்தமைந்த

கங்கணம் சேர்ந்திலங்கு கையாள், கதிர்மணியின்
கிங்கிணி சேர்ந்த திருந்தடியாள்-ஒண்கேழ்நல்

அந்துகில் சூழ்ந்தசைந்த அல்குலாள், ஆய்பொதியில்
சந்தனம் தோய்ந்த தடந்தோளாள் -வந்து

திடரிட்ட திண்வரைக்கண் செய்த முலையாள்
கடல்பட்ட இன்னமுதம் அன்னாள், -மடல்புட்ட

மாலை வளாய குழலாள், மணம்நாறு
சோலை இளங்கிளிபோல் தூமொழியாள், - சாலவும்

வஞ்சனை செய்து மனங்கவரும் வாட்கண்ணுக்(கு)
அஞ்சனத்தை யிட்டங்(கு) அழகாக்கி - எஞ்சா

மணிஆரம் பூண்டாழி மெல்விரலிற் சேர்த்தி
அணிஆர் வளைதோள்மேல் மின்ன- மணியார்ந்த

தூவெண் மணற்கொண்டு தோழியரும் தானுமாய்க்
காமன் உருவம் வரவெழுதிக் - காமன்

கருப்புச் சிலையும் மலர் அம்பும் தேரும்
ஒருப்பட்டு உடன்எழுதும் போழ்தில் -விருப்பூரும்

தேனமருங் கொன்றையந்தார்த் தீர்த்தன் சிவலோகன்
வானமால் ஏற்றின்மேல் வந்தணையத் - தானமர

நன்றறிவார் சொன்ன நலந்தோற்றும் நாண்தோற்றும்
நின்றறிவு தோற்றும் நிறைதோற்றும் - நன்றாகக்

கைவண்டும் கண்வண்டும் ஓடக் கலைஓட
நெய்விண்ட பூங்குழலாள் நின்றொழிந்தாள்-
மெய்கொண்ட

### 3. மங்கை

மங்கை இடம்கடவா மாண்பினாள் வானிழிந்த
கங்கைச் சுழியனைய உந்தியாள் -தங்கிய

அங்கை கமலம்; அடிகமலம்; மான்நோக்கி
கொங்கை கமலம்; முகம்கமலம்-பொங்கெழிலார்

இட்டிடையும் வஞ்சி; இரும்பணைத்தோள்
வேய்எழிலார்
பட்டுடைய அல்குலும் தேர்த்தட்டு - மட்டுவிரி

கூந்தல் அறல்பவளம் செய்யவாய் அவ்வாயில்
ஏய்ந்த மணிமுறுவல் இன்முத்தம் -வாய்ந்தசீர்

வண்டு வளாய வளர்வா சிகைசூட்டிக்
கண்டி கழுத்திற் கவின்சேர்த்திக் - குண்டலங்கள்

காதுக் கணிந்து கனமே கலைதிருத்திக்
தீதில் செழுங்கோலஞ் சித்திரித்து, - மாதராள்

பொற்கூட்டிற் பூவையை வாங்கி அதனோடும்
சொற்கோட்டி கொண்டிருந்த ஏல்வைக்கண்-
நற்கோட்டு

வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஒள்ளிய மால்விடையை மேல்கொண்டு -
தெள்ளியநீர்

தாழுஞ் சடையான் சடாமகுடம் தோன்றுதலும்
வாழுமே மம்மர் மனத்தளாய்ச் - சூழொளியான்

தார்நோக்கும் தன்தாரும் நோக்கும்; அவனுடைய
ஏர்நோக்கும்; தன்ன தெழில்நோக்கும் -
பேரருளான்

தோள்நோக்கும் தன்தோளும் நோக்கும்;
அவன்மார்பின்
நீள்நோக்கம் வைத்து நெடிதுயிர்த்து-
நாண்நோக்காது

உள்ளம் உருக ஒழியாத வேட்கையாம்
வெள்ளத் திடையழுந்தி வெய்துயிர் த்தாள்-
ஒள்ளிய

### 4. மடந்தை

தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தாள்- ஏய்ந்தசீர்

ஈசன் சிலையும், எழில்வான் பவளமும்,
சேய்வலங்கை வேலும், திரள்முத்தும் - பாசிலைய

வஞ்சியும், வேயும், வளர்தா மரைமொட்டும்
மஞ்சில்வரும் மாமதிபோல் மண்டலமும் எஞ்சாப்

புருவமும், செவ்வாயும், கண்ணும் எயிறும்
உருவ நுசுப்பும்மென் தோளும், - மருவினிய

கொங்கையும் வாண்முகமு மாக்கொண்டாள்
கோலஞ்சேர்
பங்கயப் போதனைய சேவடியாள்; -ஒண்கேழல்

வாழைத்தண் டன்ன குறங்கினாள் வாய்ந்தசீர்
ஆழித்தேர்த் தட்டனைய அல்குலாள்; -ஊழித்

திருமதியம் மற்றொன்றாம் என்று முகத்தை
உருவுடைய நாண்மீன்சூழ்ந் தாற்போல் -
பெருகொளிய

முத்தாரம் கண்டத் தணிந்தாள்; அணிகலங்கள்
மொய்த்தார வாரம் மிகப்பெருகி - வித்தகத்தால்

கள்ளுங் கடாமுங், கலவையுங் கைபோந்திட்டு
உள்ளும் புறமுஞ் செறிவமைத்துத் -
தெள்ளொளிய

காளிங்கம் சோதி கிடப்பத் தொடுத்தமைத்த
தாளின்பத் தாமம் நுதல்சேர்த்தித் - தோளெங்கும்

தண்ணறுஞ் சந்தனம்கொண் டப்பிச் சதிர்சாந்தை
வண்ணம் பெறமிசையே மட்டித்தாங்(கு)-
ஒண்ணுதலாள்

தன்அமர் தோழியர்கள் சூழத் தவிசேறிப்
பின்னும்ஓர் காமரம் யாழமைத்து-மன்னும்

விடவண்ணம் கண்டத்து வேதியன்மேல் இட்ட
மடல்வண்ணம் பாடும் பொழுதுஈண்டு
-அடல்வல்ல

வேல்வல்லான் வில்வல்லான் மெல்லியலார்க்(கு)
எஞ்ஞான்றும்
மால்வல்லான் ஊர்கின்ற மால்விடையின்- கோல

மணியேறு கேட்டாங்கு நோக்குவாள் சால
அணிஏறு தோளானைக் கண்டாங்(கு)-
அணியார்ந்த

கோட்டி ஒழிய எழுந்து குழைமுகத்தைக்
காட்டி நுதல்சிவப்ப வாய்துலக்கி- நாட்டார்கள்

எல்லாரும் கண்டார் எனக்கடவுள் இக்காயம்
நல்லாய் படுமேற் படுமென்று - மெல்லவே

செல்லலுறும்;சரணம் கம்பிக்கும்; தன்னுறுநோய்
சொல்லலுறும் சொல்லி உடைசெறிக்கும்- நல்லாகம்

காண லுறும்; கண்கள் நீர்மல்கும்; காண்பார்முன்
நாண லுறும் நெஞ்சம் ஒட்டாது; -பூணாகம்

புல்லலுறும் அண்ணல்கை வாரான் என் றிவ்வகையே
அல்ல லுறும்அழுந்தும் ஆழ்துயரால் -மெல்லியலாள்

தன்உருவம் பூங்கொன்றைத் தார்கொள்ளத்
தான்கொன்றைப்
பொன்உருவங் கொண்டு புலம்புற்றாள்-
பின்னொருத்தி

### 5. அரிவை

செங்கேழ்நல் தாமரைபோல் சீறடியாள் தீதிலா
அங்கேழ் அரிவைப் பிராயத்தாள் - ஒண்கேழ்நல்

திங்களும்,தாரகையும், வில்லும் செழும்புயலும்
தங்கொளிசேர் செவ்வாயும் உண்மையால் -
பொங்கொளிசேர்

மின்ஆர்வான் காட்டும் முகவொளியாள்
மெய்ம்மையே
தன்ஆவார் இல்லாத் தகைமையாள்- எந்நாளும்

இல்லாரை எல்லாரும் எள்குவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப் பென்னும்-சொல்லாலே

அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து- நல்கூர்

இடை இடையே உள்ளுருகக் கண்டாள் எழிலார்
நடைபெடை அன்னத்தை வென்றாள்;
-அடியிணைமேல்

பாடகம் கொண்டு பரிசமைத்தாள் பன்மணிசேர்
சூடகம் முன்கை தொடர்வித்தாள்; -கேடில்சீர்ப்

இன்னிசை வீணையை வாங்கி இமையவர்தம்
மன்னும் கழுத்தை மகிழ்வித்தாள்; பொன்னனாள்

இன்னிசை வீணையை வாங்கி இமையவர்தம்
அண்ணல்மேல் தான்இட்ட ஆசையால் -
முன்னமே

பாடல் தொடங்கும் பொழுதில் பரஞ்சோதி
கேடிலா மால்விடைமேல் தோன்றுதலும்- கூடிய

இன்னிசையும் இப்பிறப்பும் பேணும் இருந்தமிழும்
மன்னிய வீணையையுங் கைவிட்டுப்
பொன்னனையீர்

இன்றன்றே காண்ப தெழில்நலங் கொள்ளேனேல்
நன்றன்றே பெண்மை நமக்கென்று சென்றவன்தன்

ஒண்களபம் ஆடும் ஒளிவாள் முகத்திரண்டு
கண்களபம் ஆடுவபோல் கட்டுரைத்தும்
ஒண்கேழ்நல்

கூந்தல் அவிழ்க்கும்; முடிக்கும்; கலைதிருத்தும்
சாந்தம் திமிரும்; முலையார்க்கும்; பூந்துகிலைச்

சூழும்; அவிழ்க்கும்; முடிக்கும்; கலைதிருத்தும்
சாந்தம் திமிரும்; முலையார்க்கும்; பூந்துகிலைச்

அங்கை வளைதொழுது காத்தாள்; கலைகாவாள்;
நங்கை இவளும் நலம்தோற்றாள்; -அங்கொருத்தி

### 6. தெரிவை

ஆரா அமுதம் அவயவம் பெற்றனைய
சீரார் தெரிவைப் பிராயத்தாள்; -ஒரா

மருளோசை யின்மழலை வாய்ச்சொலால் என்றும்
இருள்சீர் புலரியே ஒப்பாள்; -அருளாலே

வெப்பம் இளையவர்கட்(கு) ஆக்குதலால்
உச்சியோ(டு)
ஒப்பமையக் கொள்ளும் உருவத்தாள் -
வெப்பந்தீர்ந்(து)

அந்தளிர்போற் சேவடியும், அங்கையும்
செம்மையால்
அந்திவான் காட்டும் அழகினாள்;- அந்தமில்

சீரார் முகம்மதியம் ஆதலால் சேயிழையாள்
ஏரார் இரவின் எழில்கொண்டாள்; - சீராரும்

கண்ணார் பயோதரமும் நுண்ணிடையும்
உண்மையால்
தண்ணிளங் காரின் சவிகொண்டாள்;
வண்ணஞ்சேர்

மாந்தளிர் மேனி; முருக்கிதழ்வாய் ஆதலால்
வாய்ந்த இளவேனில் வண்மையாள்; - மாந்தர்

அறிவுடையீர் நின்மின்கள்; அல்லார்போம் என்று
பறையறைவ போலும் சிலம்பு - முறைமையால்.

சீரார் திருந்தடிமேல் சேர்த்தினாள் தேர்அல்குல்
ஓரா தகலல் உறாதென்று - சீராலே

அந்துகிலும், மேகலையும் சூழ்ந்தாள்; அணிமுலைகள்
மைந்தர் மனங்கவரும் என்பதனால் - முந்துறவே

பூங்கச்சி னால்அடையப் பூட்டுறீஇப்
பொற்றொடியால்
காம்பொத்த தோளிணையைக் காப்பேவி -
வாய்ந்தசீர்

நற்கழுத்தை நல்ஆரத் தால்மறைத்துக் காதுக்கு
விற்பகரும் குண்டலங்கள் மேவுவித்து -
மைப்பகரும்

காவியங் கண்ணைக் கதம்தணிப்பாள்
போலத்தன்
தாவிய அஞ்சனத்தை முன்னூட்டி - யாவரையும்

ஆகுலம் ஆக்கும் அழகினாள் அன்னமும்
கோகிலமும் போலும் குணத்தினா -ளாகிப்

பலகருதிக் கட்டிக் கரியவாய்க் கோடி
அலர்சுமந்து கூழைய வாகிக் - கலைகரந்(து)

உள்யாதும் இன்றிப் புறங்கமழ்ந்து கீழ்த்தாழ்ந்து
கள்ஆவி நாறும் கருங்குழலாள் - தெள்ளொளிய

செங்கழுநீர்ப் பட்டுடுத்துச் செங்குங் குமம்எழுதி
அங்கழுநீர்த் தாமம் நுதல்சேர்த்திப் -
பொங்கெழிலார்

பொற்கவற்றின், வெள்ளிப் பலகை மணிச்சூது
நற்கமைய நாட்டிப் பொரும்பொழுதில் -
விற்பகரும்

தோளான், நிலைபேறு, தோற்றம், கேடாய்நின்ற
தாளான் சடாமகுடம் தோன்றுதலும்- கேளாய

நாணார் நடக்க நலத்தார்க் கிடையில்லை
ஏணார் ஒழிக; எழிலொழிக;-பேணும்

குலத்தார் அகன்றிடுக; குற்றத்தார் வம்மின்;
நலத்தீர் நினைமின்நீர் என்று- சொலற்கரிய

தேவாதி தேவன் சிவனாயின் தேன்கொன்றைப்
பூவார் அலங்கல் அருளாது - போவானேல்

கண்டால் அறிவன் எனச்சொல்லிக் கைசோர்ந்து
வண்டார்பூங் கோதை வளந்தோற்றாள்
- ஒண்டாங்கு

**7. பேரிளம்பெண்**

பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம்
பெண்மையாள்
பண்ணமரும் இன்சொற் பணிமொழியாள்-
மண்ணின்மேல்

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே வுளவென்று -
பண்டையோர்

கட்டுரையை மேம்படுத்தாள் கண்ணாடி
மண்டலம்போல்
விட்டிலங்கு நல்லுகிர்சேர் மெல்விரலாள் -
கட்டரவம்

அஞ்சப் பரந்தகன்ற அல்குலாள் ஆய்நலத்த
வஞ்சிக் கொடிநுடங்கு நுண்ணிடையாள் -
எஞ்சாத

பொற்செப் பிரண்டு முகடு மணிஅழுத்தி
வைத்தன போல வளர்ந்தே நீதி - ஒத்துச்

சுணங்கும் சிதலையுஞ் சூழ்போந்து
கண்டார்க்(கு)
அணங்கும் அமுதமுமாய்த் தோன்றி -
இணங்கொத்த

கொங்கையாள், கோலங்கட் கெல்லாம்ஓர்
கோலமாம்
நங்கையாள், நாகிளவேய்த் தோளினாள்;-
அங்கையால்

காந்தட் குலம்பழித்தாள்; காமவேள்
காதலாள்;
சாந்தம் இலங்கும் அகலத்தாள்; -
வாய்ந்துடனே

ஏய்ந்து குவிந்து திரண்டு மறிந்திருபால்
தேய்ந்து துடித்தச் செழும்பவளம்-
காய்ந்திலங்கு

முத்தமும் தேனும் பொதிந்து முனிவரையும்
சித்தம் திறைகொள்ளும் செவ்வாயாள் - ஒத்து

வரிகிடந்(து) அஞ்சனம் ஆடி மணிகள்
உருவம் நடுவுடைய வாகிப் - பெருகிய

தண்ணங் கயலுஞ் சலஞ்சலமும் தோன்றுதலால்
வண்ணங் கடலனைய வாட்கண்ணாள்
-ஒண்ணிறத்த

குண்டலஞ்சேர் காதினாள் கோலக் குளிர்மதிய
மண்டலமே போலும் மதிமுகத்தாள்-
வண்டலம்ப

யோசனை நாறும் குழலாள் ஒளிநுதல்மேல்
வாசிகை கொண்டு வடிவமைத்தாள்; -
மாசில்சீர்ப்

பாதாதி கேசம் பழிப்பிலாள் பாங்கமைந்த
சீதாரி கொண்டுதன் மெய்புகைத்தாள்; -
மாதார்ந்த

பண்கவரும் சொல்லார்பல் லாண்டேத்தப்
பாயொளிசேர்
வெண்கவரி வெள்ளத் திடையிருந்து -
ஒண்கேழ்நல்

கண்அவனை அல்லாது காணா செவியவன(து)
எண்ணருஞ்சீர் அல்ல(து) இசைகேளா -
அண்ணல்

கழலடி யல்லது கைதொழா அஃதால்
அழலங்கைக் கொண்டான் மாட் டன்புஎன் -
றெழிலுடைய

வெண்பா விரித்துரைக்கும் போழ்தில்
விளங்கொளிசேர்
கண்பாவு நெற்றிக் கறைக்கண்டன் - விண்பால்

அரிஅரணஞ் செற்றாங்(கு) அலைபுனலும்
பாம்பும்
புரிசடைமேல் வைத்த புராணன் - எரிஇரவில்

ஆடும் இறைவன், அமரர்குழாம் தற்சூழ
மாட மறுகில் வரக்கண்டு - கேடில்சீர்

வண்ணச் சிலம்படி மாதரார் தாம்உண்ட
கண்ணெச்சில் எம்மையே ஊட்டுவான்-
அண்ணலே

வந்தாய்; வளைகவர்ந்தாய்; மாலும் அருந்துயரும்
தந்தாய் இதுவோ தகவுஎன்று-நொந்தாள்போல்

கட்டுரைத்துக் கைசோர்ந்து அகமுருகி
மெய்வெளுத்து
மட்டிவரும் பூங்கோதை மால்கொண்டாள் -
கொட்டிமைசேர்

பண்ணாரும் இன்சொற் பணைப்பெருந்தோள்
செந்துவர்வாய்ப்
பெண்ஆர வாரம் பெரிதன்றே-விண்ணோங்கி

மஞ்சடையும் நீள்குடுமி வாள்நிலா வீற்றிருந்த
செஞ்சடையான் போந்த தெரு.

பெண்ணீர்மை காமின்; பெருந்தோளி ணைகாமின்
உண்ணீர்மை மேகலையும் உள்படுமின் -
தெண்ணீரக்

காரேறு கொன்றையந்தார்க் காவாலி கட்டங்கன்
ஊரேறு போந்த துலா.

# பதினொன்றாம் திருமுறை

# சொல்லகராதி

**(A special Lexicon on 'PADHINONRAM THIRUMURAI')**

வாழ்க! பயில்க!
இன்புறுக.
அன்புடன்
புலவர் மணியன்
22-7.18


ஆசிரியர்

முனைவர் **புலவர்மணியன்** எம்.எ; பி.லிட்; பி.எட்; பி எச்.டி.,

கோயம்புத்தூர் - 35

முதல் பதிப்பு : பிப்ரவரி - 2018

பிரதிகள் : 500

பெயர் : பதினொன்றாம் திருமுறை - சொல்லகராதி
(A Special Dictionary on 'PadhinonRam ThirumuRai')

பொருள் : சிறப்புச் சொல்லகராதி

ஆசிரியர் : முனைவர் புலவர்மணியன்

எழுத்துரு : 12 புள்ளி - T S C சாய் இந்திரா

வடிவமைப்பு : முனைவர் புலவர்மணியன்

நூல் பக்கங்கள் : 550

விலை : ரூ. 600/-

வெளியீடு :
இராமானந்த அடிகளார் அறக்கட்டளை
(குமரகுரு பொறியியல் கல்லூரி)
சின்ன வேடம்பட்டி, கோயம்புத்தூர் - 641 049

அச்சிட்டோர் :
ருக்மணி ஆப்செட் பிரஸ்
சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோயமுத்தூர் - 641 021
✆ : 2672789, 2672435

பதினொன்றாம் திருமுறை

# சிறப்புச் சொல்லகராதி

*( A special Lexicon on 'Padhinonraam Thirumurai'-
A Hymns collection)*



வெளியீடு
இராமானந்த அடிகளார் அறக்கட்டளை
கோயம்புத்தூர்

ஆசிரியர்
முனைவர் புலவர்மணியன்












தமிழ் நாட்டில் பிள்ளையாருக்கென முதன் முதலில் கோயில் அமைந்த கணபதீச்சரம் என்னும் 'திருச்செங்காட்டங்குடி'க் கோயிலும் அங்குள்ள 'வாதாபி கணபதிக்' கோயிலும். உள்ளே எழுந்தருளி நமக்கு காட்சி தருகிறார் பிள்ளையார்.

பிரகாரத்தில்–இக் கோயிலை எழுப்பிய சிறுத் தொண்டர், அவர் மனைவி 'திருவெண்காட்டு' நங்கை, மகன் சீராளன், தாதி சந்தன நங்கை ஆகியோரது திருவுருவங்கள் அமைந்துள்ளன.

Rukmani Offset Press, Cbe. ✆ 0422-2672789